நமது அம்மா
Dt. 16/09/18

# பள்ளிகளில் பிளாஸ்டிக் பயன்படுத்த தடை

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேட்டி

சென்னை, செப் 16-

அரசு பள்ளி மாணவர்களுக்கு விசாட் எனும் புதிய தொழிற்நுட்பத்தில் நீட் பயிற்சியை தலைமை செயலகத்தில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், நேற்று தொடங்கி வைத்தார்.



பின்னர் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

வரும் திங்கள்கிழமை முதல் மாணவ, மாணவிகள் பாலித்தீன் பைகளை உபயோகிக்கக் கூடாது என தனியார் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளுக்கும் பள்ளிக்கல்வித்துறை மூலமாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் 413 மையங்களில் ஸ்பீடு நிறுவனம் மூலம் நீட் தேர்வுக்கான பயிற்சி தொடங்கியுள்ளது. பிளஸ்1 , பிளஸ்2 வகுப்பு மாணவர்கள் 1200 மதிப்பெண் பெற வேண்டும் என இருந்தது. அதனை ஒரே தேர்வாக மாற்றி (பிளஸ்-1ல் 600, பிளஸ்-2ல் 600) அமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பிளஸ்-1 தேர்வில் வெற்றி பெற வேண்டும். பிளஸ்-2 தேர்வில் 1200 மதிப்பெண் என முன்பு இருந்தது 600 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பிளஸ்-1 தேர்வில் வெற்றி பெற வேண்டும். பிளஸ்-2 தேர்வில் எடுக்கப்படும் 600 மதிப்பெண் உயர்கல்விக்கு செல்லத் தகுதியாக கருதப்படும். 6 பாடத்திற்கு மட்டும் 600 மார்க் வீதம் உயர் கல்விக்கு செல்ல ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.